# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.139/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவிச்சந்திரன் | Father's Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | தியானபுரம் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 06th day of February 2026.**

**(A1 to A5 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தியானபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி ராம்பிரசாத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் காலை 6.00 மணியளவில் 2 வது சாட்சியாக நானும் முதல் சாட்சியாக வள்ளல் என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1**. பின் காலை 7.00 மணியளவில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்தை நானும் முதல் சாட்சியாக வள்ளல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.06 14:45:37 +0530

என்பவரும் போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2**. பின் காலை 9.00 மணியளவில் சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜரும் வரைபடமும் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக வள்ளலும் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 21.10.2023 ம் தேதி அதிகாலை 6.00 மணியளவில் நானும் முடுக்கு தெருவை சேர்ந்த வள்ளல் என்பவரும் தெட்சிணாமூர்த்தி மடத்திற்கு செல்வதற்காக விளமல் கல்லு பாலம் அருகில் சென்று கொண்டிருந்தபோது போலீசார் 3 நபர்களை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார் எனவும் அதில் ராம்பிரசாத் என்பவர் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததில் நான் 2 வது சாட்சியாகவும் வள்ளல் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் ராம்பிரசாத்திடமிருந்து 2 இரும்பு ராடு, 2 உருட்டுக் கட்டைகள், 5 மங்கி குள்ளாக்களும் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் வள்ளல் முதல்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.06 14:46:09 +0530

சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் பின் போலீசார் தயார் செய்த பார்வை மகஜரில் நான் 2வது சாட்சியாகவும் வள்ளல் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியும் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களில் உள்ள கையெழுத்தை விளமல் கல்லுப் பாலத்தில் வைத்து போட்டேன், காவல் நிலையத்தில் போடவில்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் எனவும் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.06 14:46:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.